4. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவையிலிருந்து வெளியேற்றம்

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, அவரது இருக்கையைவிட்டு வேறோர் உறுப்பினரின் இருக்கையில் அமர்ந்துகொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.ம. வேலுசாமி, நீங்கள் உங்களுடைய இடத்தைவிட்டு மாறி வேறொருவரின் இருக்கையில் அமர்ந்துகொண்டு, அவசியமில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அன்றைக்கே எச்சரித்து இருக்கிறேன்; அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்ப நான் எச்சரித்து எச்சரித்து விட்டுக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். எங்கே வந்து உட்கார்ந்து, எங்கேயிருந்து சத்தம் போடுகிறீர்கள் நீங்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* அவரது இருக்கையைவிட்டு, வேறோர் இருக்கைக்கு வந்து அவையை நடத்தவிடாமல், இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறார்; வெளியேற்றுங்கள் அவரை. *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. செ.ம. வேலுசாமியை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். *(குறுக்கீடு)* திரு. செ.ம. வேலுசாமி, அவருடைய இடத்தைவிட்டு மாறிப் போய் உட்கார்ந்துவிட்டு, சபையை நடத்த விடாமல் இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* பல முறை எச்சரித்தும் அவர் வேண்டுமென்றே இப்படிச் செய்துகொண்டிருக்கிறார். இதற்கப்புறமும் என்னை என்ன பண்ணச்சொல்கிறீர்கள்? நான் பல முறை எச்சரித்துவிட்டேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஆணையிட்ட பிறகு, காவலர்கள் ஓர் உறுப்பினரை வெளியேற்றப் போகிறபொழுது, மற்ற உறுப்பினர்கள் அந்தக் காவலர்களை உள்ளே வர விடாமல் தடுப்பது, ஒட்டுமொத்தமாக அவைக்கு இழைக்கப்படும் ஒழுங்கீனமாகும். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட ஓர் உறுப்பினருடைய பெயரை மாண்புமிகு தலைவர்

சொல்லியிருக்கிறார். அவரை வெளியேற்றுவதற்குத் தாங்கள் வழிவகுக்க வேண்டும். இல்லாவிட்டால், முடியாது என்று சொன்னால் எல்லோரையும் வெளியேற்றுவதா என்பது குறித்து மாண்புமிகு தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். It is highly irregular to touch the officials. அரசு அலுவலர்களை, காவலர்களை அவர்கள் பணி செய்யவிடாமல் தடுப்பது இந்த அவைக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய குற்றம். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை இரண்டு தரப்பிலும் எழுந்தது. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இரண்டு தரப்பிலும் இல்லை. *(குறுக்கீடுகள்)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் சொல்லி முடித்துவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* என்ன இது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பிரச்சினை இரண்டு தரப்பிலும் இல்லை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: என்னை நீங்கள் சொல்லக்கூட விடமாட்டேன் என்கிறீர்களே? முதலிலே எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் ஏன் பேசக்கூட முடியாதா? என்ன இது? *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.ம. வேலுசாமி, அவர் இருக்கையைவிட்டு வேறு இடத்தில் உட்கார்ந்துகொண்டு, அவையை நடத்தவிடாமல் இடைஞ்சல் பண்ணிக்கொண்டிருந்தார். பல முறை நான் அவரை எச்சரித்துவிட்டேன். அதேமாதிரி தொடர்ந்து அவர் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர் இந்த அவையில் இருந்தால் இந்த அவையை நடத்த முடியாத நிலை உருவாகும்.

2008 ஏப்ரல் 30]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. செ.ம. வேலுசாமி அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று நீங்கள் உத்தரவு தந்தீர்கள். அவர் ஒருவரை வெளியேற்றுவதற்கு 100 பேர், ஆண் காவலர்கள், பெண் காவலர்கள் என வரிசையாக அணி வகுத்துச் செல்வது எந்தவிதத்தில் நியாயம் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவரை மட்டும்தான் நான் வெளியேற்றச் சொல்லியிருக்கிறேன். வேறு யாரையும் வெளியேற்றவில்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. திரு. செ.ம. வேலுசாமியை மட்டும்தான் வெளியேற்றுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றார்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களை விட்டு ஓர் உறுப்பினரை வெளியேற்றச் சொல்கிறபோது, எத்தனை காவலர்களை உள்ளே அனுப்புவது, யார், யாரை அனுப்புவது, பெண் காவலர்களை அனுப்புவதா அல்லது ஆண் காவலர்களை அனுப்புவதா என்பது உங்களுடைய purview. அது சபாநாயகர் அவர்களுடைய உத்தரவு. காவலர்கள் பத்துப் பேராகப் போகிறபோதே அவர்களைப் போகவிடாமல் தடுக்கிறபோது, ஒரு உறுப்பினரை வெளியேற்ற ஒரே ஒரு காவலர் போனால் என்ன ஆகும் என்பதை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.